
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

குறள் முழக்கம்



திருவள்ளுவர் ஆண்டு-2057 ஆடி-28 பொ.ஆ.2026- ஆகத்து-13

உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகம் வெளியிடும் இலவச இணையத் திங்களிதழ்

புகழ் வணக்க மலர்

பாரதம் பாடிய பாரதியின் புகழைப் பாடிய வாயினால்

திருமிகு பி.வி.அவர்களைப் பாடி மகிழ்ந்த வாய் மூடிக்கொண்டதா?

இல்லை.

நல்லதோர் தமிழ் நடையினால்

தமிழர் மனங்களில்


நிலையான

இடத்தைத் தேடிக்கொண்டது.





10.10.71 அன்று என் இல்லத்தில் நடைபெற்ற கவியரங்கம். எனக்குப் பின்னால் மாலையுடன் நிற்பவர் தான் எதிரொலியார்.--பாசந்தி



ஒலி மறைந்தது, எதிரொலி நிறைந்தது!

- தேசம் மொழியென பாரதி வழியில்
  தேசியம் பாடியவன்
  பேசும் மொழியால் 'பெருந்தமி ழன்'எனும்
  பெருமை கூடியவன்!
- 'தேசியக் கவி'யென மாக்கவி பாரதி
  தேர்ந்திடக் கோரியவன்;
  நேசம் பழகும் தமிழ்க் குரலுக்கு
  'எதிரொலி' ஆகியவன்
- புதிதாய் எதையும் வரவேற் பதிலே
  புதுமைக் குரலொலிக்கும்
  எதிரொலி விசுவ நாதன் புகழை – திசை
  எட்டும் எதிரொலிக்கும்!

மறைவு
27.07.2026

- ஓவியக் கவிஞர் **மலர்மகன்**

'எதிரொலி' விசுவநாதன் (நவம்பர் 22, 1941 - ஜூலை 28, 2026) என்பவர் ஒரு புகழ்பெற்ற தமிழ் மரபுக் கவிஞர் மற்றும் எழுத்தாளர் ஆவார். பாரதியார் மற்றும் பரலி. சு. நெல்லையப்பர் மீதான பற்று காரணமாக 'பாரதிப்பித்தர்' என்றும் அழைக்கப்பட்டார். இவருக்கு உவமைக்கவிஞர் சுரதா 'எதிரொலி' என்ற பட்டத்தை வழங்கினார்.இவர் 1941ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் நாள் பிறந்தார்..எழுபது கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து 'எதிரொலிகள்' என்ற நூலை வெளியிட்டார். இதைப் பாராட்டியே சுரதா இவருக்குப் பெயரிட்டார்.1971ஆம் ஆண்டில் குரோம்பேட்டையில் 'பாரதி நெல்லையப்பர் மன்றம்' என்ற அமைப்பைத் தொடங்கினார்..இவர் இயற்றிய நூல்கள்:

பாரதிக்கு விடுதலைபாரதியின் தம்பி (பரலி சு. நெல்லையப்பர் பற்றியது)பரம்பரை கண்ட பாவேந்தர்பாரதியும் பரமசிவனும்

2026ஆம் ஆண்டு ஜூலை 28 ஆம் நாள் காலமானார்

‘எதிரொலி விசுவநாதன்’ என்ற திருவாரூர் சு. விசுவநாதன்

நவீன காலத் தமிழ் இலக்கிய உலகின் விடிவெள்ளியாய் தோன்றிய மகாகவி சுப்ரமண்ய பாரதியாரால் ‘எனதருமை தம்பி’ என்று அன்போடு அழைக்கப்பட்ட சிறப்புக்குரிய சீடர் பரலி. சு. நெல்லையப்பர். புதுவையில் வாழ்ந்த காலத்தில் தனக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டபோதெல்லாம் எப்பாடுபட்டேனும் அந்தப் பணத் தேவையைப் பூர்த்தி செய்த நெல்லையப்பருக்கு, 1915-இல் மகாகவி அனுப்பிய கடிதத்தில் “தம்பி... தமிழ், தமிழ், தமிழ் என்று எப்போதும் தமிழை வளர்ப்பதைக் கடமையாகக் கொள்க!” என்று உணர்ச்சி பொங்க எழுதியிருந்தார்.

அத்தகைய பாரதியின் அருமைத் தம்பியான பரலி. சு. நெல்லையப்பர், தமிழையும், பாரதியின் புகழையும் உயிர்மூச்சாய் வளர்த்ததோடு அவ்விதமே தொடர்ந்து வளர்க்க தமக்கொரு சீடரும் தம்பியுமாக ஒருவரைத் தேர்ந்தெடுத்து வளர்த்தெடுத்தார். அத்தகைய பெருமைக்குரிய பெருந்தகைதான் ‘எதிரொலி விசுவநாதன்’ என்ற திருவாரூர் சு. விசுவநாதன். பாரதி மீதும் அவர்தம் அருமைத் தம்பி போன்ற பரலி. சு. நெல்லையப்பர் மீதும் எதிரொலியார் கொண்டிருந்த பாசத்துக்கும், தமிழ் நேசத்துக்கும் ஓர் எடுத்துக்காட்டு, அவர் படைத்தளித்த அற்புத இலக்கியமான ‘பாரதியின் தம்பி’.

அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் திருவாரூரில், 1941-ஆம் ஆண்டு நவம்பர் 22-ஆம் தேதி பிறந்தவர், சு. விசுவநாதன். அவரது தந்தையார் பெயரும், அவர் போற்றிய மகாகவியின் இயற்பெயரான சுப்ரமணியன் என்பதுதான். பாரதியின் புகழ்பாடும் கவிஞர்களில் முதன்மைக் கவிஞராக வலம்வந்த விசுவநாதன், பள்ளிப் பருவத்திலேயே கவிதைகள் பாடும் புலமை பெற்றிருந்தார். பள்ளிச் சிறுவனான அவரது கவிப் புலமையைக் கண்டு வியந்த திருலோக சீதாராம், அவருக்கு ‘பால பாரதி’ என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தார்.

விசுவநாதனின் பெயரோடு எப்போதும் ஒட்டிக்கொண்டு, தனித்தவோர் அடையாளமாகத் திகழும் ‘எதிரொலி’ என்ற சிறப்புப் பட்டத்தை அவருக்கு வழங்கிச் சிறப்பித்தவர், உவமைக் கவிஞர் சுரதா. சென்னை, குரோம்பேட்டையில் நெல்லையப்பர் வாழ்ந்த காலத்தில், அவரைச் சந்திக்கும் பேறு கிடைத்து, அவருக்குச் சிறந்த மாணாக்கராய் வாய்த்த விசுவநாதன், கடந்த 1965-ஆம் ஆண்டில் நெல்லையப்பரின் வழிகாட்டுதலின் பேரில், தமிழகத்தின் முன்னணிக் கவிஞர்கள் 70 பேரின் படைப்புகளைத் தொகுத்து, ‘எதிரொலிகள்’ என்ற பெயரில் நூலாக வெளியிட்டார். அந்தத் தொகுப்பு நூலின் சிறப்பைக் கண்டு வியந்த சுரதா, ‘எதிரொலி’ என்ற சிறப்புப் பட்டத்தை விசுவநாதனுக்குச் சூட்டினார்.

பாரதியின் அன்பரும் விடுதலைப் போராட்ட வீரருமான பரலி. சு. நெல்லையப்பர் குரோம்பேட்டையில் வாழ்ந்து வந்த காலத்தில், அவர் மறைந்த 1971-ஆம் ஆண்டு வரையில், அவருக்கு நெருங்கிய சீடராய் பணிவிடைகள் செய்ததோடு, தமிழ் மற்றும் பாரதி குறித்த இலக்கிய ஆய்வுகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தார், எதிரொலி விசுவநாதன்.

பாரதி பற்றிய அவரது ஆய்வுகளில், ஆகச் சிறந்த நூல் ‘பாரதிக்கு விடுதலை’. பாரதியின் படைப்புகளுக்கான பதிப்புரிமை தனியாரின் கட்டுப்பாட்டில் பல ஆண்டுக் காலம் இருந்ததையும், பாரதி விடுதலைக் கழகம் போன்ற தமிழார்வ அமைப்புகளின் போராட்டங்களைத் தொடர்ந்து 1949-இல் பாரதியின் படைப்புகள் பொதுவுடைமை ஆக்கப்பட்டதையும் உணர்ச்சி பொங்க விவரிக்கிறது, அந்நூல். அதுமட்டுமின்றி, பாரதியை தேசியக் கவிஞர் என்ற சிறிய வட்டத்துக்குள் அடைத்துவிடாமல், அவரது பெண்ணியச் சிந்தனைகள், சமூகச் சீர்திருத்தங்கள், சாதி ஒழிப்புக் கொள்கைகள், உலகளாவிய மானுடப் பார்வை ஆகிய சிந்தனைச் செறிவை எடுத்துரைத்து, அவர் பற்றிய தவறான புரிதல்களில் இருந்து அந்நூல் விடுதலை அளிக்கிறது. அத்துடன் பாரதி ஆய்வுகளில் உள்ள தவறுகள், குறைபாடுகள் ஆகியவற்றைக் களைந்தும், பாரதிக்கு விடுதலை தருகிறது.

எதிரொலியாரின் மற்றொரு மிகச் சிறந்த ஆய்வு நூல், ‘பாரதியும் பரமசிவனும்’. 1990-இல் வெளிவந்த இந்நூல், கண்ணன் பாடல்களைப் பாடிய மகாகவி பாரதியாரின் பாடல்களிலும் கட்டுரைகளிலும் காணப்படும் சிவ வழிபாடு மற்றும் வேதாந்த, சித்தாந்தக் கோட்பாடுகளையும் இதன் மூலமான சமயம் கடந்த உலகளாவிய மானுடப் பார்வையையும் விளக்கியுரைக்கிறது.

பாரதி பற்றி இதுபோன்ற இலக்கியப் படைப்புகளை உருவாக்கியளித்த எதிரொலி விசுவநாதன், தனது மானுடப் படைப்பான மகளுக்கும் ‘பாரதி’ என்றே பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

பாரதி மற்றும் பரலி. சு. நெல்லையப்பர் ஆகியோரின் புகழையும், சிந்தனையையும் பரப்ப, 'பாரதி நெல்லையப்பர் மன்றம்' என்ற இலக்கிய- பண்பாட்டு அமைப்பை, நெல்லையப்பர் இறுதிக் காலத்தில் வாழ்ந்த குரோம்பேட்டையின் பாரதி புரம் பகுதியில், கடந்த 1971-இல் எதிரொலி விசுவநாதன் தொடங்கினார்.

பாரதி, அவரது சீடர் பரலி சு. நெல்லையப்பர் ஆகியோர் மீது மட்டுமல்ல, பாரதியின் மற்றொரு சீடர் பாரதிதாசன் மீதும் பற்றுக் கொண்டவர் எதிரொலியார். அவ்வகையில் இவர் படைத்தளித்த 'பாரதிதாசன் பரம்பரை' என்ற ஆய்வு நூல், பாரதிதாசன் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்ட 1990-இல் வெளிவந்தது. தமிழ் இலக்கிய உலகில் பாரதிக்குப் பின் பாரதிதாசன் கொண்டுவந்த மிகப் பெரிய மாற்றத்தையும், அந்தத் தாக்கத்தின் விளைவாக உருவான சீடர்களான தமிழ்க் கவிஞர்களின் பங்களிப்பையும் பாங்குற விளக்குகிறது இந்நூல். இதனை முதன்மை ஆதாரமாகக் கொண்டு, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வேடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பது இந்நூலின் பெருமையைப் பறைசாற்றும்.

எதிரொலி விசுவநாதனின் எழுத்துகளில் நினைவுகூரத் தக்க மற்றோர் படைப்பிலக்கியம், புதுக்கோட்டையில் உள்ள ஞானாலயா ஆய்வு நூலகம் பற்றி, அதே தலைப்பில் அவர் எழுதிய ஆய்வு நூல். இதுமட்டுமின்றி, வள்ளலார், காந்தியடிகள், அண்ணல் அம்பேத்கர், தியாகி வ.வே.சு. அய்யர், திரு.வி.க., வெ. சாமிநாத சர்மா, நாரண. துரைக்கண்ணன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மற்றும் குழந்தை இலக்கியப் பணிச் செல்வர் ப. வெங்கடராமன் போன்ற பலதுறை ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறுகளையும் நூல்களாக எழுதியுள்ளார். இவ்வாறாக 50-க்கும் மேற்பட்ட அரிய நூல்களைப் படைத்தளித்துள்ளார்.

இவ்விதம் பாரதியின் புகழையும், தமிழின் பெருமையையும் பரப்புவதைத் தன் உயிர்மூச்சாகக் கொண்டு, குறிப்பாக பாரதியின் கருத்துகள் இளம் தலைமுறையினரிடம் எதிரொலிப்பதைத் தம் வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த எதிரொலி விசுவநாதன் அவர்கள், சென்னையின் புறநகர்ப் பகுதியான ஊரப்பாக்கத்தில், (2026 ஜூலை 28-ஆம் தேதியன்று மண்ணுலகில் இருந்து விடைபெற்று, பாரதியோடு ஐக்கியமானார்.

அன்னாரின் வழியில், பாரதியின் கருத்துகளை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டுசெல்ல நாம் உழைப்பதே, அவர் போன்ற பாரதி அன்பருக்கு நாம் செய்யும் உண்மையான நினைவஞ்சலி ஆகும்.

பாரதியின் 'எதிரொலி' விசுவநாதன்----பத்மன்– "பொருள் புதிது" இணைய இதழ்

https://porulputhithu.com/2026/07/31/a-tribute-to-ethiroli-viswanathan/



பாரதியாரின் பொன்னுடல் சுமந்த பரலி சு.நெல்லையப்பர்

பேராசிரியர் சரஸ்வதி ராமனாதன்

தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளத் தெரியாத சாமான்யர்; பாரதியின் நண்பர்; பாரதியால் 'தம்பி' என அழைக்கப்பெற்றவர்; பாரதியை நேசித்தவர்; பூசித்தவர் பரலி சு. நெல்லையப்பர்! தியாகிக்கென்று பட்டா போட்டு அரசு தந்த நிலத்தினை நகராட்சி பள்ளி கட்டத் தந்துவிட்ட உயர்ந்தவர். தான் கொடுத்த நிலம் என்று தன் பெயரைப் போட்டுக் கொள்ளாமல் பாரதி பெயரை இட்டவர். வாழ்ந்த பகுதிக்கு 'பாரதிபுரம்' எனப் பெயர் தந்தவர், பாரதி பக்தர் தானே!

18.9.1889 திருநெல்வேலி அருகே பரலிக்கோட்டை கிராமத்தில் சுப்பிரமணிய பிள்ளை- முத்துலட்சுமி அம்மாள் தம்பதியரின் இரண்டாவது மகனாகப் பிறந்தவர். இவரது அண்ணா 'வந்தே மாதரம்' சண்முகசுந்தரம். மெட்ரிகுலேஷன் வரை தான் படிப்பு. வ.உ.சி.யின் சுதேசிக் கப்பல் கம்பெனியில் கணக்கு எழுதும் பணியில் சேர்ந்தார். அரசு குமாஸ்தா பணிக்குப் போகாமல் வ.உ.சி. வெள்ளையருக்கு எதிராகக் கடலில் செலுத்திய கப்பல் கம்பெனியில் வேலைக்குப் போனதிலிருந்தே இவரது தேசபக்தி புரிகிறதே!

அண்ணனோ 'வந்தேமாதரம்' என்றே முழங்கிய சண்முகசுந்தரம், 'ஜெய்ஹிந்த்' முழக்கம் செய்த செண்பக ராமனைப் போன்றவர். வந்தேமாதரம் என்று வணங்கியபின் மாயத்தை வணங்குவரோ! வந்தேமாதரம் ஒன்றே தாரகம்" என்றிருந்தவர்.

குடும்பச் சூழ்நிலை 17 வயதிலே கணக்குப் பிள்ளையாகத் திண்ணையில் அமரவைத்தது. 1907 சிதம்பரனார் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்த கணக்குப் பிள்ளையை வந்த ஒருவர் கையைப் பிடித்து எழுப்பி 'உலாவ வாரும்' என்றார். அவர்தான் மகாகவி பாரதி என்று நெல்லையப்பர் அறியவில்லை. பாரதிக்கும் இவர் தம் உற்ற நண்பராக, உதவிடும் வள்ளலாக இருக்கப்போகிற, நெல்லையப்பர் என்று தெரியாது.

இருவரும் கை கோர்த்து உலவினர். பாரதி பல கவிதைகளை முழங்கினார். இவரும் நன்கு ரசித்தார். பின்னர் ஒரு சிறு கவிதை நூலைப் பரலியார் கையில் தந்துவிட்டுப் போனார் வந்தவர். படித்தபின் தான், "ஆகா! பாரதியாரல்லவா என்னோடு உலவ வந்தார். அவரல்லவா என் கையைப் பற்றினார். அவர் கவிதைகளையல்லவா நான் நேரில் அவர் வாயால் கேட்டு மகிழ்ந்தேன்" என்று பரலியார் பூரித்தார்.

1908 விபின் சந்திர பாலர் விடுதலை அடைந்த போது நாடே மகிழ்ந்தது. விடுதலைப் போராட்ட வீரர் மகிழ்ந்தனர். விழாக்கள் கொண்டாடினர். கூட்டம் கூடி விட்டாலே ஆங்கில அரசுக்கு ஆட்டம் ஆரம்பித்து விடும். உடனே 144 தடை உத்தரவு, கூட்டம் நடத்தத் தடை, அடிதடி, துப்பாக்கிச் சூடு என்று அராஜகம் தலைவிரித்தாடும். அப்படித்தான், தூத்துக்குடியில் விழா கொண்டாடிய வ.உ. சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா, பத்மநாப ஐயங்கார் ஆகியோரைக் கைது செய்து சிறையிலடைத்தது அரசு.

'கூட்டம் போடுவோம்' எனத் துண்டுச் சீட்டு அடித்து விநியோகித்த பரலியார் கைது ஆகிச் சிரம்பரனாருடன் சிறையிலடைக்கப்பட்டார். பாளைச் சிறையில் அவர்களைப் பார்க்க வந்த பாரதியின் தரிசனம் பரலியாரை மகிழ்வித்தது.

விடுதலை பெற்றபின் பரலியார் சும்மா இருந்தாரா? இல்லை. வ.உ.சி.யின் மனைவியையும், நண்பர்களையும் கூட்டிக்கொண்டு சிதம்பரனாரை விடுவிக்க மேல் முறையீடு (அப்பீல்) செய்ய வேண்டிச் சென்னை வந்தார். பாரிஸ்டர் சாமிநாதனையும், திருச்சி மாவட்ட நீதிபதி பாலசுப்பிரமணிய ஐயரையும் சந்தித்து விபரங்கள் சொல்லி, உதவ வேண்டினார். உளவுத் துறையின் கண்களில் படாமல் அனைத்தையும் செய்தார். புரட்சி இளைஞர் குழுவுடன் இணைந்தார். பாரதியை மீண்டும் சந்தித்துப் பேசினார். பிரெஞ்சு ஆட்சியிலிருந்த புதுச்சேரிக்கு மகாகவி சென்றுவிட்டால் ஆங்கில அரசு கைது செய்ய முடியாது என்று புதுவைக்கு வழியனுப்பினார்.

சிறையிலிருந்த சிதம்பரனாரை அவ்வப்போது சென்று கண்டு வந்தும், மற்றவர் வழியும் சிதம்பரனார் படும் கொடுந்துன்பங்களைப் பாரதிக்கு எழுதி அறிவித்தவர் பரலியாரே. புதுவையிலிருந்து பாரதி வெளியிட்ட 'இந்தியா' பத்திரிகையில்

‘துன்பம் சகியான்’ என்ற புனைப்பெயரில் கட்டுரை எழுதினார். அது பலருக்கும் சிறைவாசத்தின் கொடுமையைக் காட்டி, தேசபக்தி எழுச்சியை ஊட்டியது.

“கோவை சிறையில் மிருகத்திற்குப் பதிலாக நம் சிதம்பரம் பிள்ளையைச் செக்கிழுத்து எண்ணெய் ஆட்ட வைக்கிறான் ஜெயில் அதிகாரி. கொதிக்கும் வெயிலில், தீப்பறக்கும் செக்கிழுக்கும் சிதம்பரனாரை நினைக்கவே நெஞ்சுருகுகிறதே!” என்று எழுதினார். பாரதி படித்துவிட்டுக் கண்ணீர் விட்டு அழுது “தண்ணீர் விட்டே வளர்த்தோம். சர்வேசா கண்ணீரால் காத்தோம். கருகத் திருவுளமோ! மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும் நூலோர்கள் செக்கடியில் நோவதுவும் காண்கிலையோ?” என்று கதறினார்.

பரலியாரின் கட்டுரை 28.11.1908ல் வந்தது; பாரதியின் கவிதை 19.12.1908ல் ‘இந்தியா’ இதழில் வந்தது.

1909ல் சுதந்திரப் போராட்ட வீரர் நீலகண்ட பிரம்மச்சாரியைச் சென்னையில் சந்தித்தார் நெல்லையப்பர் என்ற பிரம்மசாரி; ஆம்; திருமணமே செய்து கொள்ளாமல் விடுதலை வேள்வி குறித்தே சிந்தித்தவர் நெல்லையப்பர். அவருடன் புதுவை சென்று பாரதியை மீண்டும் கண்டு அவர் அன்புக்குரியவராய் அவர் இல்லத்திலே தங்கினார். பாரதியாரின் ‘சூர்யோதயம்’, ‘கர்மயோகி’ முதலிய பத்திரிகைகளில் பணியாற்றினார். 1910 மார்ச் ‘கர்மயோகி’ இதழில் ‘ஸ்ரீமான் தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளையின் சந்திப்பு’ என்ற கட்டுரை வெளிவந்தது. புதுவைக்கு ரகசியமாக வந்த புரட்சி வீரர் அரவிந்தரையும், வ.வே.சு. ஐயரையும் வரவேற்று உதவிகள் செய்தார். நெல்லையப்பரே நல்ல கவிஞராதலால் பாரதியின் கவிதைகளை உடனிருந்து கேட்டுப் பாராட்டினார்.

பாரதி நடத்திய இதழ்கள் 1911-ல் நின்றுபோயின; பொருளாதார வசதியின்மை காரணம். சிதம்பரனார் பாரதிக்கு உதவி கேட்டு மடல் எழுத, நெல்லையப்பர் தானே முன்வந்து கோவை சென்று உதவினார். பாரதி 3 விருத்தங்கள் “வேளாளன் சிறை புகுந்தான்” என்ற பாடலாக எழுதித் தந்தார். சிதம்பரனாரின் குடும்பத்திற்கும் உதவினார் பரலியார். பாரதியும், சிதம்பரனாரும் கடிதங்கள் (எ) சீட்டுக்கவிகள் எழுதியுள்ளனர். அந்த அளவுக்கு நெருக்கமான நண்பர். பிறருக்கு உதவும் பெருந்தன்மையாளர் நெல்லையப்பர். பாரதிக்கும், வ.உ.சி.க்கும் இடையில் செய்தித் தூதுவராகப் பரலியார் திகழ்ந்தார் எனலாம்.

1912ல் சிதம்பரனார் விடுதலையான பின் 1913ல் பரலியார் சென்னை, சிந்தாதிரிப் பேட்டையில் சிதம்பரனார் வீட்டில் தங்கினார். ‘லோகோபகாரியான’ நெல்லையப்பர் ‘லோகோபகாரி’ பத்திரிகையில் துணை ஆசிரியரானார். 1915ல் சதாவதானம் கிருஷ்ணசாமிப் பாவலருடன் ‘பாரதி’ என்ற வார இதழ் தொடங்கினார். எதற்காக? பிழைப்புக்காகவா - இல்லை! விடுதலை உத்வேகத்தைக் கவிதை கட்டுரைகள் வாயிலாக வளர்க்க!

பாரதி, ‘என் அருமைத் தம்பியே! நான் ஏது செய்வேனடா! தம்பி, மாதத்துக்கு மாதம், நாளுக்கு நாள் நினதறிவு மலர்ச்சி பெற்று வருவதைக் காண்கிறேன். ஹா! உனக்கு ஹிந்தி, மராத்தி முதலிய வடநாட்டு பாஷைகள் தெரிந்திருந்து அந்தப் பத்திரிகைகள் என்ன புதுமைகள் பெற்றுள்ளன என்பதை நேரிடைத் தெரிந்துகொள்ள முடியுமானால் தமிழ் நாட்டிற்கு எத்தனை நன்மைகள் உண்டாகும்!” எனத் தன் நாட்டுப் பற்று உணர்ச்சிப் பிரவாகத்தைக் கொட்டிக் கொட்டிப் பல கடிதங்களைப் பாரதி எழுதியுள்ளார்.

(உரிமையுடன் தம்பி என்று அழைத்துப் பாசமழை பொழிந்து ‘டா’ போட்டுக் கூப்பிட்ட அந்தத் தம்பி பரலி சு. நெல்லையப்பரே!)

‘அதைச் செய், இதைச் செய்’ என்று குருபோலக் கட்டளையிடுகிறார். “தம்பி! தமிழனை விட மற்றொரு ஜாதியான் அழகாயிருப்பதைக் கண்டால் என் மனம் புண்ணாகிறது. தமிழை விட மற்றொரு பாஷை சுகமாயிருப்பதைப் பார்க்கும் போது எனக்கு” எனத் தன் எழுத்தில் வடிக்கிறார் பாரதி. ‘தம்பி, தமிழ்நாடு வாழ்க என்று எழுது’ என்று கட்டளையிட்டு எழுதுவார். அவர் எழுதிய கவிதைகளை அனுப்புவார்.

நெல்லையப்பரும் பாரதியாரின் கவிதைகளை ‘ஞான பானு’, ‘பாரதி’, ‘லோகோபகாரி’ போன்ற பத்திரிகைகளில் வெளியிடுவார். அதுமட்டுமா, பணத்தேவை என்றால் கூட அந்தப் புலமைப் பெருமிதத் தன்மானச் சிங்கம் பாரதி, தம்பி நெல்லையப்பருக்கு எழுதுவார். “பணம் அனுப்புவது உன் கடமையல்லவா! உனக்கு இன்பம் உண்டாகுக” என வாழ்த்தி எழுதுவார். ஸகாய புருஷன் என்றே பாரதி இவரைக் குறிப்பிடுவார்.

12 நூல்களுக்கு மேல் எழுதிய நெல்லையப்பர், பாரதியை முன்னிறுத்த விரும்பினாரே தவிர, தன்னை எங்கும் முதன்மைப்படுத்திக் கொள்ளவில்லை.

பாரதியை 'நோபல் பரிசு பெறாத தமிழ்நாட்டுத் தாகூர்' என்று கண்ணன் பாட்டு முன்னுரையில் பரலியார் குறிப்பிடுகிறார். பாரதி அவதார புருஷர் என்றார் பரலியார். பாரதியுடனே 10 நாட்கள் பயணித்த அந்த ஆனந்த அனுபவ அலைகளைக் கட்டுரையாக வடித்தார். பாரதியின் கண்ணன் பாட்டு, நாட்டுப்பாட்டு (தேசிய கீதம்) பாப்பா பாட்டு, முரசுப்பாட்டு இவற்றை மீண்டும் பிரசுரித்தார். மீண்டும் சென்னை வேப்பேரியில் பாரதி - செல்லம்மாவுடன் தங்கியிருந்தார்.

'தேச பக்தன்' ஆசிரியரானார் பரலியார். பாரதியின் கடைசி நாள்களில் அவருடனிருந்து கடைசி நிமிடம் வரை பாரதி பக்கத்திலிருந்து அவர் பொன்னுடலைச் சுமந்து தம்பியாகத் தன் கடமையை ஆற்றினார். பாரதியின் இறுதி ஊர்வலத்தில் (11.9.1921) அவர் உடம்பில் மொய்த்த ஈக்களை விடக் குறைவான பேர்களே வந்தார்கள் என்றார் ஒரு கவிஞர். அச்சம், பேடிமை, அடிமைச் சிறுமதி கொண்ட தமிழர், ஆங்கில அரசு தண்டிக்குமே என்று அஞ்சி அந்தத் தேசபக்தனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் கடமையிலிருந்து தவறிவிட்டனர்.

நாடு, பாரதி, வ.உ.சி, பத்திரிகைத் தொழில், கவிதை என்றே சிந்தித்தவர், தன் சொந்த வாழ்வு குறித்து எண்ணவேயில்லை. வளர்ப்பு மகள் பூங்கோதையின் குடும்பத்தையும் சேர்த்துத் தாங்கினார். தியாகி பென்ஷனை வாங்க மறுத்து விட்டார். ஊதியத்திற்காக நாட்டுப்பணி செய்யவில்லை என்று உறுதியாய்ச் சொல்லிவிட்டார். அரசு தந்த நிலத்தை பல்லாவரம் நகராட்சிப் பள்ளி அமையத் தானம் செய்து விட்டார்.

முதுமைக் காலத்தில் பாராட்டுக்கள் பரலியாரைத் தேடி வந்தன. சுரதா ஏற்பாடு செய்து அண்ணா தலைமையில் பாராட்டு விழா, ம.பொ.சி.யின் பாராட்டு, தமிழ் எழுத்தாளர் சங்கப் பாராட்டு, குமுதம் சார்பாக உதவி எனத் தொடர்ந்தன.

இதெல்லாம் எதிர்பார்த்தா சிறை சென்றார்? இதை எதிர்பார்த்தா தொண்டருக்குத் தொண்டராக ஓடியாடி உதவினார்? இதை எதிர்பார்த்தா தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார்? தொண்டரடிப் பொடியாழ்வார் போல பாரதி அடிப் பொடியாராக வாழ்ந்தார் பரலியார். அவரோடு அன்பாகப் பழகி பரலியார் அடிப்பொடி என்றே வாழும் எதிரொலி விசுவநாதன், சென்னையில் இன்றும் 'பாரதி - பரலி சு.நெல்லையப்பர் மன்றம்' வைத்து அவர்கள் இருவரின் புகழையும் பரப்புகிறார்.

நரைத்த தலை, கசங்கிய கதர் ஆடை, தோளில் நீண்ட ஜோல்னா பை, நெற்றி நிறையத் திருநீறு, வாய் நிறையப்பாட்டு, நெஞ்சம் நிறையப் பாரதிபற்று, ஒவ்வொரு நாடி நரம்பிலும் தேசபக்தி இது தான் நெல்லையப்பர் என்கிறார் எதிரொலி விசுவநாதன். அவர் வாழ்ந்த குரோம்பேட்டையில் அவரது திருவுருவச் சிலை (தபால் நிலையம் முன்பு) அமைந்துள்ளது.

'ஊருக்காக வாழ்ந்த நெஞ்சம் சிலைகள் ஆகலாம்' என்பது கவியரசர் கண்ணதாசன் மொழிகள் அல்லவா?

நன்றி: விஜயபாரதம்



பாரதியின் மறைந்து நிற்கும் எழுத்துக்களைக் கண்டறிதலை வாழ்வுப் பணியாகத் தலைமேற் கொண்ட 'எதிரொலி' விசுவநாதனை வாழ்த்தி மத்திய அமைச்சர் ஜி. கே. வாசன், பொள்ளாச்சி நா. மகாலிங்கம் போன்றோர் பொன்னாடை அணிவிக்கும் சீர் (பாரதியார் சங்க 61-ஆம் ஆண்டுநாள், ராணி சீதை அரங்கம், சென்னை, செப். 11, 2009).